thiraimalar.com

# திரைமலர்

வெள்ளிக்கிழமை தோறும்

மலர்-1 இதழ்-8 .காம்

22.9.2023

பல்சுவை வார இதழ்



சென்னையை துரத்தும் மைதா மரணம்...

## மக்களே உஷார்!

E-magazine

E-magazine

## அரசியல் பழிவாங்கலில் விஜயின் லியோவா?

# அடுத்த படத்திற்கு தயாராகும் ரஜினி



## சினிமாவில் இணையப்போகும் அப்பா மகள்

அப்பாமகள் கமல்ஹாசன் மற்றும் ஸ்ருதிஹாசன் இருவரும் சினிமாத்துறையில் இணையபோகி றார்கள். ஸ்ருதி கமல் இருவரும் ஒரு பாடலுக்கு இணைந்து பணிபுரியவிருப்பதாக சமீபத்தில் சமூகவலைதளத்தில் ஸ்ருதி அறிவிப்பு வெளி யிட்டுள்ளார்.

## நீண்ட போராட்டத்திற்கு பின் வெளிவரும் படம்

இயக்குநர் பாலா இயக்கத்தில் அருண் விஜய் நடிக்கும் வணங்கான் படத்தின் ஃபர்ஸ்ட் லுக் விரைவில் வெளியாகப் போவதாக கூறுகின்றனர். முன்னதாக சூரியாவுடன் வணங்கான் படத்திற்கு ஆதரவாக 2டி என்டர்டெயின்மென்ட் பேனர் அறிவிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும், சில கருத்துவேறுபாடுகளுக்குப் பிறகு, நடிகரும் அவரது தயாரிப்பாளரும் திட்டத்திலிருந்து விலகினர்.

வணங்கான் படத்தில் ரோஷினி பிரகாஷ் கதாநாயகியாக நடிக்கிறார், அதே சமயம் சமுத்திரக்கனி இந்த படத்தில் ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார், ஜி.வி.பிரகாஷ் இசையமைக்க, வைரமுத்து பாடல்களை எழுது கிறார். ஆர்.பி.குருதேவ் ஒளிப்பதிவு செய்ய, சில் வா இந்த படத்திற்கு ஆக்ஷன் காட்சிகளுக்கு நடனம் அமைக்கிறார்.

## மீண்டும் ஜோடி சேரும் ஜெயம்ரவி நயன்தாரா

ஜெயம் ரவி, நயன்தாரா நடித்துள்ள இறைவன் படம் தணிக்கை நிகழ்வுகள் முடிந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. செப்டம்பர் மாதத்திலேயே இந்தப் படம் வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



இப்படத்தில் நயன்தாரா முக்கிய வேடத்தில் நடித்துள்ளதாக கூறப்படுகிறது. இப்படத்திற்கு தணிக்கைத்துறை A சான்றிதழ் வழங்கியுள்ளது. புன்னகை மற்றும் மனிதன் ஆகிய படங்களை இயக்கிய ஐ அகமது இயக்கிய, இறைவன் ஒரு தொடர் கொலைகாரனைச் சுற்றி வரும் க்ரைம் த்ரில்லராகக் கூறப்படுகிறது.

இதற்கிடையில், முன்பு தனி ஒருவன் படத்தில் பணிபுரிந்த ஜெயம் ரவி மற்றும் நயன்தாரா மீண்டும் இப்படத்தில் இணைந்துள்ளதாக கூறப்படுகிறது.




# அரசியல் பழிவாங்கலில் விஜயின் லியோ

அரசியல் விமர்சகர் சவுக்கு ஷங்கர் தனது அதிகாரப்பூர்வ ஙீ வலைதளத்தில், லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிக்கவிருக்கும் லியோ படத்தின் ஆடியோ வெளியீட்டு விழா குறித்து ஒரு செய்தியைப் பகிர்ந்துள்ளார்.

"விஜய்யின் லியோ ஆடியோ வெளியீட்டு விழா வரும் செப்டம்பர் 30ம் தேதி நேரு உள் அரங்கில் நடைபெற உள்ளது. இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை. திமுக குடும்பத்தைச் சேர்ந்த ரெட் ஜெயண்ட் லியோ தயாரிப்பாளருக்கு தடையாக நின்று செயல்புரிகின்றனது. சென்னை, செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு ஆகிய பகுதிகளின் விநியோக உரிமையை ரெட் ஜெயண்ட் மூவீஸுக்கு வழங்கினால் மட்டுமே அனுமதி வழங்கப்படும் என்று மிரட்டுவதாக கூறினார்.

ஆனால், லியோவின் தயாரிப்பாளரான செவன் ஸ்கிரீன் ஸ்டுடியோ, இந்த செய்தியை புரளி, அவை வெறும் வதந்திகள் என்று கூறியது.

த்ரிஷா, அர்ஜுன், சஞ்சய் தத், பிரியா ஆனந்த், மிஷ்கின் மற்றும் பலர் நடித்துள்ள லியோ படத்தின் தாமதத்திற்கு அரசியல் உள்நோக்கம் இருப்பதாகவும் சினிமா வட்டாரத்தில் பேசப்படுகிறது.

தி.மு.க.விற்கு ஆதரவு தந்து தேர்தல் சமயத்தில் சைக்கிளில் சென்று அ.தி.மு.க. அரசை கவிழ்க்க உறுதுணையாக இருந்த விஜய்க்கே இந்த நிலையா என்று விஜய் ரசிகர்கள் வருத்தப்படுகின்றனர். அதிமுக விசுவாசிகளும் விஜயின் தவறான பிரசாரத்திற்கு தற்போது பலன் அனுபவித்து வருகிறார் என்று கூறி வருகின்றனர்.

thiraimalar.com
திரைமலர்

# மோதலில் இறங்கிய பாலா

துருவ் விக்ரம் படத்தின் அறிவிப்பை பா ரஞ்சித் தனது ட்விட்டர் பக்கத்தில் அறிவித்து இருந்தார். அடுத்த நொடியே இயக்குனர் பாலா படத்தின் அறிவிப்பும் வெளியானது. இதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்தால்

இயக்குனர் பாலா இயக்கத்தில் அறிமுகமாக வேண்டிய துருவ் விக்ரம் அர்ஜுன் ரெட்டி படத்தின் ரீமேக்கை இயக்குனர் பாலா சரியாக இயக்கவில்லை எனச் சொல்லிவிட்டு மீண்டும் அதே கதையில் ஆதித்ய வர்மாவாக தமிழ் சினிமாவில் அறிமுகமானது மிகப்பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

ஆதித்ய வர்மா வெளியான பின்னர் பாலாவின் வர்மா திரைப்படம் வெளியானது குறிப்பிடத்தக்கது. இரண்டு படங்களுக்காகவும் துருவ் விக்ரம் மிகப்பெரிய உழைப்பை போட்டு நடித்திருந்தாலும் அந்த இரண்டு படங்களும் அவருக்கு பெரிதாக கைகொடுக்கவில்லை.

விஜய் தேவரகொண்டவை மிகப்பெரிய நடிகராக மாற்றிய படம்தான் அர்ஜுன் ரெட்டி. ஆதித்ய வர்மா படத்திற்கு பிறகு அதே அர்ஜுன் ரெட்டியை ஹிந்தியில் கபீர் சிங் என ரீமேக் செய்து கிட்டத்தட்ட 400 கோடி ரூபாய் வசூலை பாலிவுட்டில் ஈட்டினர்.

பெரிய கிசு....
பெரிய கிசு....




சூர்யாவை வைத்து இயக்குனர் பாலா இயக்கி வந்த வணங்கான் திரைப்படம் சரியாக வரவில்லை எனக்கூறி சூர்யா மற்றும் நடிகை கிருத்தி ஷெட்டி அதிலிருந்து விலகிய நிலையில் அருண் விஜய் நடிப்பில் உருவாகியுள்ள வணங்கான் திரைப்படத்தின் அப்டேட் பாலாவின் டீம் திட்டமிட்டு ரிலீஸ் செய்திருப்பதாக சர்ச்சைகள் வெடித்துள்ளன.

## அடுத்த படத்திற்கு தயாராகும் ரஜினி

சன் பிக்சர்ஸ் சமீபத்தில் வெளியான ஜெயிலரின் வெற்றி சந்திப்பை நடத்தியது. evnet தயாரிப்பாளர் கலாநிதி மாறன், இயக்குனர் நெல்சன், இசையமைப்பாளர் அனிருத், நடிகர் ரஜினிகாந்த் மற்றும் நடிகர்கள் மற்றும் படக்குழுவினர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வை நினைவுகூரும் வகையில் நடிகர்கள் மற்றும் குழுவினருக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது. பின்னர், நடிகர் ரஜினிகாந்த் ஜெயிலர் குழுவினருக்கு நன்றி தெரிவிக்க மேடைக்கு வந்தார். நடிகர்கள் மற்றும் குழுவினருக்கு தனது பாராட்டுகளை தெரிவித்தார்.

"உண்மையைச் சொல்வதானால், ஜெயிலரின் வெற்றியின் மகிழ்ச்சி ஐந்து நாட்கள் மட்டுமே நீடித்தது. அதன் பிறகு என் மனம் அடுத்த படத்திற்குச் சென்றது, இப்போது நான் அதைப் பற்றிய சிந்தனையில் உள்ளேன், எனது அடுத்த படம் ஜெயிலர் படத்தை மிஞ்சும் அளவிற்கு இருக்க வேண்டும் என்பதால் அதுகுறித்து பதற்றமாக இருக்கிறேன்," என்றார்.

1995 இல் பாஷாவின் மாபெரும் வெற்றிக்குப் பிறகு தனது அடுத்த நகர்வை எப்படித் திட்டமிட்டார் என்பதை ரஜினிகாந்த் நினைவு கூர்ந்தார். "அந்தக் காலத்தில் நான் வருடத்திற்கு 1 படம் மட்டுமே நடித்து வந்ததால், பாஷாவின் வெற்றிக்குப் பிறகு, அதிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒன்றைச் செய்யத் திட்டமிட்டேன். அடுத்து பாஷா, முத்து அப்படித்தான் நடந்தது." என்றார்.

## ஐஸ்வர்யா ராஜேஷ் போட்டோஷூட்

காக்கா முட்டை திரைப்படத்தில் 2 சிறுவர்களுக்கு அம்மாவாக நடித்திருந்தார். விஜய் சேதுபதி நடிக்கும் படங்களில் நடிக்க துவங்கினார். அவருடன் தொடர்ந்து நடித்து ரசிகர்களிடம் பிரபலமாகி மற்ற ஹீரோக்களுடனும் நடிக்க துவங்கினார். ஒருகட்டத்தில் பெண் கதாபாத்திரங்களுக்கு முக்கியத்துவம் உள்ள கதைகளில் நடிக்க துவங்கினார்.

ஆனாலும், தனுஷ், அஜித், விஜய், விஷால் உள்ளிட்ட நடிகர்கள் அவருடன் ஜோடி போட்டு நடிக்க விரும்பவில்லை. எனவே, கிடைக்கும் வாய்ப்புகளில் நடிக்க துவங்கினார். தி கிரேட் இண்டியன் கிச்சன், ஃபர்ஹானா, தீரா காதல், சொப்பன சுந்தரி, டிரைவர் ஜமுனா என அவர் நடிப்பில் வெளியான எந்த படங்களும் ஓடவில்லை.

எனவே, இப்படியே போனால் மார்க்கெட் காலியாகிவிடும் என யோசித்த ஐஸ்வர்யா கட்டழகை விதவிதமான உடைகளில் காண்பித்து போட்டோஷூட் நடத்தி தன்னுடைய சமூக வலைத்தள பக்கங்களில் பகிர்ந்து வருகிறார். இப்போது, மோகன்தாஸ் உள்ளிட்ட சில தமிழ் படங்களிலும், சில மலையாள திரைப்படங்களிலும் நடித்து வருகிறார்.

# தள்ளிப்போகும் அஜித் படப்பிடிப்பி எம்.ஜி.ஆருடன் அஜத்தை இணைத்து பேசிய கே.ராஜன்




தில்லு இருந்தா போராடு திரைப்படத்தின் இசைவெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது.

வனிதா விஜயகுமார், யோகிபாபு ஆகியோர் நடிப்பில் எஸ்.கே.முரளிதரன் இயக்கத்தில் வெளியாக காத்துக் கொண்டிருக்கிறது தில்லு இருந்தா போராடு படம். சென்னையில் நடந்தது.அந்த விழாவிற்கு திரையுலகை சார்ந்த பலர் பங்கேற்றனர். இதில் பேசிய தயாரிப்பாளர் கே.ராஜன் வாழ்க்கையில் எப்படி பிரச்சினைகளை நேர்கோண்டு சமாளிக்க வேண்டும் என்ற வகையில் சில விஷயங்களை பேசினார்.

அப்போது நடிகர் அஜித்தை பற்றியும் எம்ஜிஆரை பற்றியும் ஒப்பிட்டு சில விஷயங்களை பேசினார். அதாவது எம்ஜிஆர் ரசிகர்களை அவ்வப்போது சந்திப்பார். அவர்களோடு மனம் விட்டு உரையாடுவார். ரசிகர்களுடன் கூடவே பழகுவார். ஒன்றாக உட்கார்ந்து சாப்பிடவும் செய்வார். அதனாலேயே எம்ஜிஆருக்கு ஒட்டுமொத்த தமிழ் மக்களும் தங்கள் அன்பை கொட்டினார்கள். ஆனால் இந்த அஜித் ரொம்ப அதிர்ஷ்டக்காரன். ரசிகர் மன்றத்தை கலைத்தார்.

ரசிகர்களுடன் உரையாடுவது இல்லை. அவர்களுடன் ஒரு புகைப்படம் கூட எடுப்பதில்லை. முதல்வருக்கு பாராட்டு விழா வைத்தால் வருவதும் இல்லை. அப்படியே வந்தாலும் என்னை வற்புறுத்தி வரவழைத்தார்கள் என்று சொல்வது.

இப்படி இருக்கும் அஜித் மீது ரசிகர்கள் இந்தளவுக்கு பைத்தியமாக இருக்கிறார்கள் என்றால் அஜித் மிகவும் அதிர்ஷ்டக்காரன். ஆனால் மனசளவில் நல்ல மனிதர். பல பேருக்கு தெரியாமலேயே உதவி செய்து கொண்டு வருகிறார்.

அவருக்கு வைக்கிற ஒரே வேண்டுகோள். ரசிகர்களுடன் ஒரே ஒரு செல்ஃபி எடுக்க



அனுமதியுங்கள் என்று கே.ராஜன் அந்த விழாவில் அஜித்தை பற்றி பேசினார்.

அஜித் நடிக்கும் படங்களின் பெயர் வெளியே தெரிந்தாலும் படப்பிடிப்பு என்பது என்னவோ தள்ளி... தள்ளி... இன்னும் தள்ளி என்று தள்ளிக்கொண்டே போகும் என்பது அனைவரும் அறிந்ததே.

ஆனால் தற்போது துணிவு படம் வெளியாகி 8 மாதங்கள் ஆகியும் அஜித்தின் அடுத்த படத்தின் படப்பிடிப்பு இதுவரை துவங்கப்படவில்லை என்பதால் அவரது ரசிகர்கள் மிகுந்த சோகத்தில் உள்ளதாக கூறப்படுகிறது.

பைக் பிரியரான அஜீத் இந்தியா முழுவதையும் பைக்கில் வலம் வந்து விட்டார், தற்போது அவரின் பார்வை உலக அளவில் திரும்பியுள்ளதால், உலகை பைக்கில் வலம் வரும் விதத்தில் பல்வேறு நாடுகளில் விசாவிற்கு விண்ணப்பித்து, அந்த நாடுகளில் பைக்கில் வலம் வந்து கொண்டிருக்கிறார்.

அந்தவகையில், விடாமுயற்சி பட அறிவிப்பு வெளியாகியே 4 மாதங்களுக்கும் மேல் ஆகிறது. ஆனால், இப்போது வரை படப்பிடிப்பு துவங்கப்பட்டவில்லை. இதில், இயக்குனர் மகிழ்திருமேனி மிகுந்த அப்செட்டில் உள்ளார்.

படப்பிடிப்பு இப்போது துவங்குகிறது.. அப்போது துவங்குகிறது என தொடர்ந்து மாறி மாறி செய்து வெளியாகி அதுவும் நடக்காமல் போனது விடாமுயற்சி படத்தில்தான்.

இப்படியே கடந்த 3 மாதங்கள் ஓடிவிட்டது. அஜித் ரசிகர்களும் டயர்ட் ஆகிவிட்டனர்.

முதலில் இப்படத்தின் படப்பிடிப்பு சென்னையில் துவங்குகிறது என்றனர். அதன்பின் ஹைதராபாத் என்றனர். அதன்பின், புனே என்றனர். இப்படியே மும்பை, ஹாங்காங், லண்டன், துபாய், அபுதாபி என பல ஊர்களின் பெரும் அடிபட்டது. இப்போது அபர்பைசான் என சொல்லியுள்ளனர்.

ஏதாவது ஒரு ஊரில் படப்பிடிப்பை துவங்குங்கப்பா என்று படக்குழுவினர் நொந்து சொல்லும் அளவிற்கு விரக்தியடைந்து விட்டனர் படப்பிடிப்பினர். அபர்பைசானில் அழகான இடங்கள் இருப்பதாக சொல்கிறார்கள். இதற்கு பின்னால் இருப்பது அஜித்தா?.. இயக்குனரா? இல்லை தயாரிப்பாளர் தரப்பா என்பதுதான் தெரியவில்லை.

கதை, கவிதை, நேர்காணல், துணுக்கு செய்திகள், ஜோக், சினித்துறை செய்திகள் அனைத்தையும் வரவேற்கிறோம்.

# நமது இதழில் உங்கள் படைப்பு வெளிவரவேண்டுமா?

சாதனையாளர், தொழில்முனைவோர், கல்வியாளர், கலைத்துறையினர், சமூக சேவையாளர், சிந்தனையாளர், கவிஞர் என அனைத்து துறையினரின் சாதனைகளையும் வெளியுலகிற்கு தெரியப்படுத்த எங்களை தொடர்பு கொள்ளவும்.

+919444264610

# பொறுப்பு

தன் பேத்தி, பேரன்களுக்கு அடுத்தடுத்து பிறந்த நாள் வருவதையொட்டி புதுத் துணிமணிகள் எடுப்பதற்காக குடும்பத்தோடு அந்த பிரபல ஜவுளி நிறுவனத்திற்கு பேருந்தில் புறப்பட்டுச் சென்றார்..

ஓய்வு பெற்ற ஆசிரியர் ராமலிங்கம்.

பேருந்தில் கூட்டம்..

இளைஞர்கள் படிக்கட்டில் உள்ள ஆபத்தை உணராமல் தொங்கிக் கொண்டிருந்தனர்.

இதைக் கண்ட ராமலிங்கத்திற்கு கோபம் வந்தது.

பொறுப்பில்லாத பசங்க என்று முணுமுணுத்துக் கொண்டார்.

பேருந்து நிறுத்தத்திற்கு எதிரே இருந்த கடைக்கு சாலையை கடந்து போகும் வேளையில் ஒரு இளைஞன் இரு சக்கர வாகனத்தில் இவரை இடித்து விடுவது போல வந்து வேகமாக கடந்து சென்றான்.

இந்தக் கால இளைஞர்கள் ரொம்ப மோசம்.. எதிலும் அலட்சியம்..

எதிலும் வேகம்.. எதையும் கண்டுகொள்ளாமல் இருப்பவர்கள்..

பொறுப்பே இல்லாதவர்கள்..

என்று புலம்பியபடியே சாலையை கடந்து சென்றார்.

கடைக்குள்ளே நுழையும் போது கடைக்கு வெளியில் இருந்த கும்பலில் புகை பிடித்து கொண்டிருந்த ஒரு இளைஞன் இவரைக் கண்டதும் அப்படியே பம்மினான்.

"அது நம்பத் தெரு சங்கரன் மகன் ராமு தானே... கூட நிற்பதும் நம்ம தெரு பசங்க தானே..? என்று தன் மகனிடம் கேட்டார் ராமலிங்கம்.

ஆமாம் என்றான் மகன்..

இருந்தாலும் நம்ம பசங்க ரொம்ப மோசம்..

சின்ன வயதிலேயே கெட்டுப் போறாங்க..

பொறுப்பே இல்லாதவங்க என்று மகனிடம் திட்டிக் கொண்டே கடைக்குள் சென்றார்.

இந்த வருடம் அந்த கடையின் 25 வது ஆண்டு நிறைவு விழா என்பதால்.... கடை கூடு தல் அலங்காரம்... ஆட்டம்... பாட்டம் என்று ஒரே கோலாகலமாக இருந்தது.

அங்கங்கே பல பொம்மை உருவங்கள் அணிந்த படி குழந்தைகளை மகிழ்வித்து கொண்டு சிலர் ஆடிக் கொண்டிருந்தனர்.

அப்பொழுது

மிக்கி மவுஸ் வேடம் போட்ட ஒரு உருவம் ராம லிங்கம் அருகே வந்து கை கொடுத்தது. இவரும் கை கொடுக்கவே அந்த அந்த உருவம் இவர் கையை ஒரு வித ஸ்பரிஸத்தோடு அழுத்தியதை ராமலிங்கத்தால் உணர முடிந்தது.

அந்த அழுத்தம் இவரை நன்கு தெரிந்தது போல உணர்த்தியது.



குடும்பத்தினர் ஆடைகளை தேர்வு செய்வதில் நேர தாமதம் ஆக்கவே..

நிற்க முடியாமல் ஒரு ஓரமாகக் கிடந்த சேரில் வந்து அமர்ந்தார் ராமலிங்கம்.

அப்போது அந்த மிக்கி மவுஸ் உருவம் அவர் அருகே வந்தது.

தன் முகத்திலிருந்த முகமூடியை கழற்றியபடியே..

என்ன சார் என்னை தெரியலையா...!! நான் தான் உங்கள் தெருவில் இருக்கும் மூர்த்தி என்றான்.

thiraimalar.com திரைமலர்

ஏய் மூர்த்தி நீயா..!?

இது என்னப்பா வேஷம்..!?

நீ இப்பத் தானே காலேஜ்ல சேர்ந்தே...

படிச்சிகிட்டுத் தானே இருக்க...?

பிறகு இங்க என்ன பண்ற...?

என்ன இதெல்லாம்? என்றார்.

ஆமாம் சார்... கல்லூரியில் இப்போ தான் சேர்ந்தேன்.. அப்பாவுக்கு நிரந்தர வேலை இல்லை என்பது உங்களுக்கு தெரியும்.. வருமானம் பத்தல..

ஆனாலும் கஷ்டப் பட்டு சமாளித்து கல்லூரிக்கு ஃபீஸ் கொடுக்கிறார்..

அதனால் கல்லூரியின் மற்ற செலவுகளுக்கு நானும் என் பங்குக்கு இங்கே பகுதி நேரமா வேலைக்கு சேர்ந்திருக்கிறேன்..

இது ஓரளவுக்கு என் மற்ற செலவுகளுக்கு கை கொடுக்கும் சார் என்றான்.

தொடர்ந்து இப்படி ஏதாவது ஒரு பகுதி நேர வேலைகளை பார்க்க முடிவெடுத்து உள்ளேன்..

சார்.. அப்புறம் ஒரு விஷயம்! இது அப்பாவுக்கு தெரிய வேண்டாம்.. தெரிஞ்சா மனசு ரொம்ப சங்கடப்படுவார் சார். ஒகே சார்.. நான் வரேன் சார்.. என்று மீண்டும் தன் வேலையை தொடர ஆரம்பித்தான் மூர்த்தி.

பரவாயில்ல.. இப்போது உள்ளஇளை ஞர்களில் கூட நல்ல பசங்க...நல்ல பொறுப்போட தான் இருக்கத் தான் செய்றாங்க... ஒரிருவரை வைத்து அனைவரையும் எடை போடக் கூடாது என்றும் மனதிற்குள் நினைத்துக் கொண்டார் ராமலிங்கம்.



நெல்லை
கவி.க.மோகனசுந்தரம்.
போன்: 9865782742



Thiraimalar.com - Thiraimalar.com - Thiraimalar.com

# ஹ...ஹ... ஜோக்ஸ்

கவிதா:
"உன் மாமியாரை
நேற்று நாய் கடிச்சதாமே?
எப்படி இருக்காங்க? "
ஜெயஸ்ரீ:
"எந்த நாயை
கேட்குறே?"

சிவா விடம்
ப்ரோக்கர்:
"லைசன்ஸ் வேணும்னா
எட்டு போடணும்? "
சிவா:
"சிலர், ஏஜெண்டுக்கு துட்டு
போட்டாப் போதும்னு
சொன்னாங்களே?
பரீட்சை எழுதணும்னு
தயாரா வந்தேன் "



டாக்டர்:
"ஏன் சிவா
சாப்பாடு மேல ரெண்டு
மாத்திரை கிடக்கு? "
சிவா:
"நீங்க தானே டாக்டர்,
சாப்பாட்டுக்கு மேல ரெண்டு
மாத்திரை போட்டுக்க
சொன்னீங்க "

மாலதி:
"உங்க ஆபிஸ்ல
சுமாரா எத்தனை
பெண்கள் வேலை பார்க்கறாங்க? "
ராஜன்:
"நிறைய பேர்
சுமார் தான்,
அழகா ஒரு
மூன்று பேர் மட்டும். "



ராஜி:
"நாளைக்கு டி வி.ல,
"என் புருஷன் தான், எனக்கு
மட்டும் தான்
"படம். பார்ப்பயா மது?
மது:
"என் மாமியார் கோவில் போனால்
பார்க்கலாம். இல்லேன்னா
"நீயா? நானா? "வீட்டில்
ஆரம்பிச்சுடும் "

ஒருவர்:
"சார் மதியம் சாப்பிட்டதும்,
பஸ் சில் ஏறினால் தூக்கம்
சொக்குது "
டாக்டர்:
"ஒரு அரை மணி நேரம் தூங்க
வேண்டியது தானே? "
ஒருவர்:
"அப்போ பஸ் சை
யார் ஓட்டுவா? "

நாகேஷ்ராஜன், சென்னை 603 211. கைபேசி :8778935252.

# உடலை ஆரோக்கியமாக வைக்க உடல் வெளிப்படுத்தும் சமிக்ஞைகள்

❖ உடல் உணவை கேட்கும் மொழி **பசி**

❖ உடல் தண்ணீரை கேட்கும் மொழி **தாகம்**

❖ உடல் ஓய்வை கேட்கும் மொழி சோர்வு, **தலைவலி**

❖ உடல் நுரையீரலை தூய்மை செய்யும் மொழி **தும்மல், சளி, இருமல்.**

❖ உடல் உச்சி முதல் பாதம் வரை உள்ள கழிவுகளை வெளியேற்றுகிறேன் என்று சொல்லும் மொழி **காய்ச்சல்**

❖ உடல் காய்ச்சலின் போது உணவை உண்ணாதே என்று சொல்லும் மொழி வாய் கசப்பு மற்றும் **பசியின்மை**

❖ உடல் காய்ச்சலின் போது நான் உடலை தூய்மை செய்கிறேன், நீ எந்த வேலையும் செய்யாதே என்று சொல்லும் மொழி உடல் **அசதி**

❖ உடல் எனக்கு செரிமானம் ஆகாத உணவை நான் வெளியேற்றுகிறேன் என்று சொல்லும் மொழி **வாந்தி**

❖ உடல் நான் குடல்களில் உள்ள கழிவுகளை வெளியேற்றுகிறேன் என்று சொல்லும் மொழி **பேதி**

❖ உடல் இரத்தத்தில் உள்ள நச்சை நான் தோல் வழியாக வெளியேற்றுகிறேன் என்று சொல்லும் மொழி **வியர்வை**

❖ உடல் நான் வெப்பநிலையை சீர் செய்து இரத்தத்தில் உள்ள நச்சை முறிக்கப்போகிறேன் என்று சொல்லும் மொழி **உறக்கம்**

❖ உடல் நான் முறித்த நச்சை இதோ வெளியேற்றுகிறேன் என்று சொல்லும் மொழி **சிறுநீர் கழித்தல்**

❖ உடல் உணவில் உள்ள சத்தை பிரித்து இரத்தத்தில் கலந்து, சக்கையை வெளியேற்றுகிறேன் என்று சொல்லும் மொழி **மலம் கழித்தல்**

எனவே நாம் அனைவரும் உடலின் மொழி அறிந்து, நமக்கு ஏதேனும் உடல் உபாதைகள் ஏற்பட்டால் அதை உடனே மருந்தோ, மாத்திரையோ கொண்டு தடை செய்ய வேண்டாம். உடல் தன் வேலையை சீராக செய்ய நாம் அனுமதித்தால் தான், நாம் நோய் எனும் பிணியில் இருந்து விடுபட்டு ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ முடியும். நாம் அனைவரும் முதலில் நம் உடலை நேசிப்போம், நம் உடல் உள் உறுப்புகளை நேசிப்போம், நாம் நம்மை நேசிப்போம்.

நாம் வெளி உறுப்புகளுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கின்றோமோ, அதே அளவிற்கு நம் உள் உறுப்புகளின் உணர்வுகளும், மொழிகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அப்போதுதான் நாம் ஆரோக்கியமாகவும், அழகான தோற்றத்துடனும் இருக்க முடியும்.



# எப்படி உருவானது? T-shirts

பட்டன் போட்டுக்கொள்ள எப்போதுசோம்பேறித் தனம் வந்ததோ, அன்றைக்கு! தோன்றியதுதான் பனியன், பனியனுக்கு காலர் வெச்சாலும் வைக்கவில்லையென்றாலும் அது டீ ஷர்ட் தான்! எடுத்தோமா மாட்டினோமா கதை முடிஞ்சிடும்.

ஆரம்ப காலத்தில் உண்மையிலேயே டி ஷர்ட் என்பது அமெரிக்க இராணுவத்தினர்க்கு உள்ளாடையாக வழங்கப்பட்டது. 1898ல் அமெரிக்க மெக்ஸிகன் சண்டை காலத்தில் இது உருவானது. வெயில் தாங்க முடியாமல் ஒட உபயோகிக்கும் ஜம்ப் சூட்டின் கையை வெட்டி உபயோகிக்க தொடங்கினர்.

1950ம் ஆண்டு ஹாலிவுட் பிரபலம் மார்லன் ப்ரேண்டோ "A Streetcar Named Desire" என்ற படத்தில் டி ஷர்ட் அணிந்து நடித்தார்.

அவரைத் தொடர்ந்து ஜேம்ஸ் டீன் என்ற நடிகர் 1955ல் "Rebel Without a Cause" என்ற படத்தில் அணிந்து நடித்தார்.

இவர்கள் அணிந்ததைக் கண்ட இரசிகர்கள் மூலம் தனியாக டீ ஷர்ட் அணியும் நாகரீகம் தொடங்கி வானை தொட்டுவிட்டது.

இப்போது ஆண் பெண் என்று இரண்டு வர்கத்தினரும் விரும்பி அணியும் நாகரீக ஆடை ஆகிவிட்டது.

தற்போது வரைமுறை இல்லாமல் டீ ஷர்ட் பெருகினாலும், ஆண்களைக் காட்டிலும் பெண்களே அதிகம் பயன்படுத்துவதாக உலக அளவில் ஒரு கணக்கெடுப்பு கூறுகிறது.

**கொசுறு செய்தி....**

பெண்களுக்கு உலக அளவில் ஆடை கலாச்சாரத்தில் ஆண்களின் ஆடை கலாச்சாரத்தை அபகரித்தவர்கள் என்ற பெயரும் உள்ளது.

காரணம் ஆண்கள் மட்டுமே அணிந்து வந்த பல்வேறு ஆடைகளை, தங்கள் உடையுடன் சேர்த்து அணியும் வழக்கம் பெண்களிடம் உள்ளது, டீ ஷர்ட், பேண்ட், பெல்ஸ் போன்ற ஆண்கள் ஆடையை அபகரித்த பெண்களின் எந்த ஆடை வடிவமைப்பையும் ஆண்கள் இது வரை அபகரித்ததில்லையாம்?




thiraimalar.com
திரைமலர்






# நெய்மர்

## திரை விமர்சனம்

டிஸ்னி ப்ளஸ் ஹாட் ஸ்டாரில் காண கிடைக்கிறது, "நெய்மர்" மலையாள படம். தமிழில் டப் செய்யப்பட்டுள்ளது.

சுகிமதிசன் இயக்கி, ஜானி ஆண்டணி, மேத்யூ தாமஸ், நாஸ்லன் கே கபூர், விஜயராகவன், மற்றும் ஒரு நாட்டு நாய் பங்கேற்ற படம்.

மே 2023ல், பத்து கோடிக்குள் தயாரிக்கப்பட்ட படம் என் போன்ற பெரியவர்களை மட்டும் அல்ல ஐந்து வயது குழந்தைக்கும், காதல் கனவில் கண்டதை வாங்க துடிக்கும் நாயகன் வயது உள்ளவர்களுக்கும் பிடிக்கும்.

சலூன் கடை நடத்தும் நாயகன் அப்பா. காரில் வந்து விலை உயர்ந்த செல்ல நாயுடன் இறங்கும் நாயகி, நீயும் ஒரு நாய் வளர் என்று உசுப்பிவிடும் நண்பன்.

தன் பழைய நண்பனுக்கு கடிதம் தரும் நாயகன் தாய். நண்பனுடன் வாங்க கிளம்பும் நாயகன், ஐம்பதாயிரம் விலை சொல்லும் நாய் வியாபாரி, அம்மா கடிதத்தை பார்த்து, அவன் பொருளாதார நிலை அறிந்து, வெளியே கட்டி போட்டு உள்ள நாட்டு நாயை தருவதும் இவர்கள் சங்கிலியுடன் அழைத்து வருவதும் அருமை.

அம்மா பந்தை தூக்கி எறிந்து கேட்ச் பிடிக்க பழக்குவதும், எங்கிருந்தோ காற்றில் பறந்து வந்த தங்க மோதிரத்தை நெய்மர் (பிரேசில் கால் பந்து வீரர் நினைவாக பெயர் வைத்தது) விழுங்குவதும், போலீஸ் வந்து நாயகன் அப்பாவிடம் மோதிரத்தை எடுத்து தர சொல்வதும், இவர் ஒரு டாக்டரிடம் நாயை அழைத்து போய், வீட்டுக்கு வந்து சங்கிலி தவிர, இன்னொரு கயிற்றால் கட்டிவிட்டு நாயகனை அடித்து உதைப்பதும், நாய் தொடர்ச்சியாக குரைப்பதும் யதார்த்தம்.

பாட்டி சொன்னதன் பேரில், அப்பா அறியாமல், அம்மா நாயை அவிழ்த்து விடுவதும், நாயகன் பக்கம் வந்து ஆதரவாக நாய் பார்ப்பதும், அன்பை புரிந்து கொள்வதில் மனிதனுக்கு சளைத்தது இல்லை என்ற உண்மையை புரிய வைத்தது.

அப்பா மேல் உள்ள கோபத்தில், அடியின் வலியில், நெய்மரிடம் எரிந்து விழுந்து, எங்காவது தொலைந்து போ என்று கோபப்பட, நாய் காணாமல் போகிறது.

அன்புக்கு ஏங்கும் பல கீழ், நடுத்தர குடும்ப விடலைகள், நாய் வளர்த்து இருப்பார்கள் அப்பா எதிப்பை மீறி.

தாய் மட்டும் தான் உயிராக பார்க்கிறாள்.

அப்பா சந்தோசப்பட, நாயகன் உடைந்து

நண்பனுடன் ஊர் முழுக்க, தேட, வேன் டிரைவர் மூலம் , நாய் நாயகன் அப்பாவால் பாண்டிச்சேரிக்கு வேனில் அனுப்ப பட்டது தெரிகிறது

ஒரு இரவில் ஒரு பையில் மாற்று உடையும், கொஞ்சம் பணமுமாக பாண்டி கிளம்பும் நாயகன், நண்பனை முதலில் துணைக்கு அழைத்த போது, அவன் பயந்ததும், பிறகு சம்மதித்து சிறு பையும், ஒரு தொகையுமாக கிராமத்தில் இருந்து பஸ் பிடித்து பாண்டி வருவதும் சிறப்பு.

சாப்பாட்டுக்கு வழியின்றி, காசும் தீர்ந்து போய், பசியுடன் தெருவில் இவர்கள் மயங்கி கிடக்கும் நிலையில், ரோட்டோர கடை நடத்தும், நடுத்தர வயது பெண் இவர்களுக்கு இட்டலி தந்து விசாரிக்கிறாள்.

அங்கே வேலை, சாப்பாடு, கிடைத்த நேரத்தில் தேடல்.

நொய்மர் படம் ஒரு போஸ்டரில் தமிழில்.

இவர்கள் நாய் இறந்துவிட்டது, கண்ணீர் அஞ்சலி போஸ்டர் என்று நினைத்து கடை காரரிடம் விவரம் கேட்க, நாய் வைத்து நடக்கும் போட்டிகளும், நாய் இருக்கும் பெரிய இடமும் தெரிகிறது.

நாய் வைத்து இருக்கும் வில்லன் இவர்கள் ஆசையை, நியாயத்தை புரிந்து, போட்டி முடியும் இருபது நாட்கள், பயிற்சியாளருடன் இவர்களும் இருக்க கேட்டுக் கொள்கிறார்.



நா. நாகராஜன், ஊரப்பாக்கம்,
போன்:8778935252

பொறுமை இழந்து நாயகன், நாயை திருடி கொண்டு, ஓட நினைப்பதும், நண்பன் வர மறுப்பதும், நாய் போட்டிகள் படம் ஆக்கப்பட்ட விதமும், முடிவும் அருமை.

எழுநூறு கோடி வசூல் செய்த தமிழ் படம், தியேட்டர் அதிபர்களை வாழச் செய்தது நிஜம் என்றால், இந்த மாதிரி, வித்யாசமான கதையம்சம் உள்ள குறைந்த பட்ஜெட் படங்கள் மலையாள பட உலகை வாழ வைப்பதும், ஓ டி டி மூலம் பல மொழிகளில் பார்க்க கிடைப்பதும் பாக்கியம்.

இயக்குனருக்கு நன்றி.


## பல்சுவைச் செய்திகளை தரும் திரைமலர்.காம் இணையதளத்தில்

# நிருபராக விரும்புகிறீர்களா?

ஆர்வம் மட்டுமே போதும்
பணி அனுபவம் தேவையில்லை,
தொடர்பு கொள்ளவும்.

**9444264610**

# அதிகப்படியான சம்பளத்தால் தள்ளாடும் தமிழ் திரைத்துறை

## தரமான கதைக்கு ஓ.டி.டி.யை நாடும் மக்கள்




சினிமாத்துறையில் ஹாலிவுட், பாலிவுட், கோலிவுட் என்று பல வுட்கள் இருந்தாலும், தற்போது மக்கள் அதிகம் ரசித்து பார்க்கும் படங்கள் அனைத்தும் ஓ.டி.டி. தளங்களில் எடுக்கப்படும் குறைந்த பட்ஜெட் படங்கள்தான் என்பது பல்வேறு வகையில் நிரூபணமாகிறது.

பல நூறு கோடி முதல் பல ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்து செட் போட்டு எடுக்கும் படங்கள் ஓடுவதைக் காட்டிலும், பல லட்சங்கள் செலவில் எடுத்து ஓ.டி.டி.யில் வெளிவரும் படங்கள் தரமானதாகவும், கதையம்சம் நிறைந்ததாகவும் இருப்பதால் மக்களின் கவனம் ஓ.டி.டி. பக்கம்




செல்வதில் எந்த தவறும் இல்லை.

குறிப்பாக தமிழ் சினிமாவில் பிரம்மாண்டம் என்ற பெயரில் காரை அடித்து உடைப்பது, பில்டிங்கை சிதறடிப்பது, ஒரே ஆள் 100 ஆட்களை அடித்து துவம்சம் செய்வது, ஒவ்வொரு அடிக்கும் ஒவ்வொரு வாகனங்களை சேதப்படுத்துவது போன்ற கற்பனைக்கு அப்பாற்பட்ட செயலை தற்போது மக்கள் ரசிப்பதற்கு பதில் கேலியும் கிண்டலும் செய்ய ஆரம்பித்து விட்டனர் வளரும் தலைமுறையினர்.

இதிலும் பிரபலமான தமிழ் நடிகர்களின் நடிப்பு எதார்த்தமாக இல்லாமல் செயற்கையாக உள்ளது போல இருப்பதாகவும் கூறப்படுகிறது.

ஒல்லிக்குச்சி உடம்புள்ள நடிகர் கூட மாமிச மலைகளை துவம்சம் செய்து கடைசிவரை ஸ்டெமினார் உள்ளது போல ஸ்டெடியாக வீர வசனம் பேசுவதை மக்கள் கேலியாக பார்க்க ஆரம்பித்துவிட்டனர்.

இவர்களின் அலப்பறையை சகித்துக் கொள் ளாத பலர், நேச்சுரலாக எடுக்கப்படும் யூடியூப் சேனல் பக்கம் தங்கள் பொழுது போக்கை திருப்பி விட்டனர்.

நடிகர் நடிகைகளின் அலப்பறை இப்படியே சென்றால் இன்னும் 5 ஆண்டுகளில் இளம்தலைமுறை ரசிகர்கள் கூட்டம் குறைந்து விடும் என்றே கருத்துக்கணிக்கப்பட்டுள்ளது.

தற்போது அண்டை மாநிலமான கேரளாவிலிருந்து வெளியாகும் பட்ஜெட் படங்கள் பல மொழிகளில் ஓ.டி.டி.யில் வெளிவருவதால், அவற்றை தமிழக ரசிகர்கள் விரும்பி பார்க்கின்றனர்.

அதையும் மீறி தமிழ் சினிமாவை பார்க்க திரையரங்கிற்கு செல்பவர்கள் பாதிப்பேர் நண்பர் களுடன் ஜாலியாக வெளியே டூர் செல்வதைப் போன்று பொழுதை கழிக்கவே செல்கின்றனர்.

குறிப்பாக தற்போதைய இளம் தளமுறையினரிடம் சினிமா, தொலைக்காட்சியை தவிர்த்து செல் போனிலேயே யூடியூப் வலைதளங்களை ஆக்கிர மிக்கத் துவங்கிவிட்டனர்.

குறிப்பாக யூடியூப் வலைதளங்களில் எண்டர்டெய்ன்மென்ட் புரோகிராம் செய்யும் யூடியூபர்கள் அதித ஒப்பனையின்றி நேச்சுரலாக நடந்து கொள்ளும் விதத்தை தமிழக ரசிகர்கள் ரசிக்க ஆரம்பித்துவிட்டனர்.

இதனால்தான் பல யூடியூப் சேனல்களுக்கு சப்ஸ்கிரைபர்ஸ் கூடிக்கொண்டே செல்கின்றனர்.

சமீபத்தில் எடுக்கப்பட்ட கருத்துக்கணிப்புப் படி தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், திரைப்படங்கள் போன்றவை மெல்ல மறைய ஆரம்பிக்கும் என்று கூறப்படுகிறது.

பல நூறு கோடி மட்டுமல்ல பல ஆயிரம் கோடி செலவு செய்து எடுக்கப்படும் திரைப்படங்கள் உலகம் முழுவதும் ஒரே நேரத்தில் வெளியிட்டாலும், 10 நாட்கள் அல்லது 30 நாட்களில் திரையங்கங்கள் ஈ அடிக்கத் துவங்கிவிடும்.

உலகம் முழுவதும் உள்ள திரையரங்குகள் என்பதால் ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு மாநிலத்திலும் மாறுபடும் கட்டணத்தை வைத்து பாக்ஸ் ஆபிஸ் வசூல் என்று கூறப்படுகிறதே ஒழிய அந்தப் படத்தை திரையரங்கில் பார்ப்பதை விட ஓ.டி.டி., யூடியூப் சேனலில் பார்ப்பவர்கள்தான் அதிகம்.

இதிலும் தமிழ்த் திரையுலகில் எடுக்கப்படும் திரைப்படங்கள் தகுதி இல்லாமல் இருந்தாலும், நடிகர் நடிகைகளை நம்பியே படம் எடுக்கப்படுவதால் தமிழக ரசிகர்களின் ரசனையில் ஈயத்தை காய்ச்சி ஊற்றுவது போல மாறிவிடுகிறது. இதனால் பல

ஆயிரம் கோடி செலவில் எடுக்கும் படங்களுக்கும் மதிப்பில்லாமல் குறுகிய காலத்தில் குப்பைக்குச் சமமானதாகவே மாறிவிடுகிறது.

குறிப்பாக நடிகர்கள் நடிகைகள் வாங்கும் சம்பளத்திற்கும் அவர்கள் நடிப்பிற்கும் சம்பந்தமே இல்லாதது போல உள்ளது.

(நடிகர் நடிகைகளின் சம்பளம் தனிப்பட்ட பாக்சில் கொடுத்துள்ளோம்)

மேலும் பிரபலமான திரைப்பட நடிகர்கள் வாங்கும் சம்பளத்தை கேட்டால் வாய் பிளக்க வைத்துவிடும், அவ்வளவு சம்பளம் வாங்கியும், கிராபிக்ஸ் மூலமே அதிகப்படியன காட்சிகள் மெருகேற்றப்படுவதாலும், கிராபிக்ஸ் என்றால் என்ன என்பதை தமிழக ரசிகர்கள் அனைவருக்கும் தெரிகிறது என்பதாலும் ஹீரோக்கள் ரசிகர்கள் முன் ஜீரோக்களாக மாறிவிடுகின்றனர்.

சமீபத்தில் 100 கோடிக்கும் மேல் சம்பளம் வாங்கிய ஜெயிலர் திரைப்படத்தில் ரஜினிகாந்த் பொம்மையைப் போன்றே நடித்ததாக கூறப்படுகிறது.

அத்தனை சண்டைக்காட்சியிலும் ரஜினிகாந்த் ஒரு ஏ.ஐ. தொழில்நுட்ப பொம்மை நடித்தைப் போன்றே இருந்ததாகவும் ரசிகர்கள் மற்றும் பொதுமக்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

**தமிழ் திரையுலகம் ஹாலிவுட் அளவிற்கு எடுக்க வேண்டும் என்று நினைக்கும் தயாரிப்பாளர்கள், நடிகர்கள் நடிகைகளுக்கு தரும் முக்கியத்துவத்தை, கதைக்கு தருவதில்லை என்பது நிதர்சன உண்மை.**

thiraimalar.com திரைமலர்

ஒருகாலத்தில் திரைப்படங்கள் வெளியிடும் சமயத்தில், திரையரங்குகளை சுற்றி திருவிழாக் கோலம் போல திடீர் கடைகள், உணவு விற்பனையகங்கள் தோன்றும், அந்த திரைப்படம் திரையரங்கில் 100 நாட்கள் ஓடிய பின்பே திருவிழா ஓய்வதைப் போன்று திடீர்கடைகள் மறையும்.

அக்காலத்தில் திரைப்படத்தை நம்பியே கடை போட்டு சம்பாதித்தவர்கள் அதிகம்.

ஆனால் தற்போது மிகப்பெரிய ஷாப்பிங் மால் போன்றவற்றில் திரையரங்குகள் துவங்கப்படுகிறது, ஷாப்பிங் மால்களில் பெருகும் கூட்டத்தை நம்பியே திரைத் துறை பயணிப்பதாகவும் கூறப்படுகிறது.

இதிலிருந்து ஒரு உண்மை விளங்குகிறது. தமிழ் ரசிகர்களை இனி ஆட்கொள்ளப்போது தமிழ் சினிமாவின் ஆடம்பரம் அல்ல, கதையம்சம் நிறைந்த பட்ஜட் படங்களே என்பது தெளிவாகிறது.

## நடிகர், நடிகைகளின் சம்பள விவரம்

| | |
|---|---|
| விஜய் | 118 கோடி |
| அஜித் | 105 கோடி |
| ரஜினி | 100 கோடி |
| கமல்ஹாசன் | 35 கோடி |
| சூர்யா | 28 கோடி |
| சிவகார்த்திகேயன் | 25 கோடி |
| தனுஷ் | 20 கோடி |
| விஜய் சேதுபதி | 5 முதல் 10 கோடி |
| விக்ரம் | 15 கோடி |
| விஷால் | 4 முதல் 5 கோடி |
| ஆர்யா | 4 முதல் 5 கோடி |
| ஜெயம் ரவி | 5 முதல் 8 கோடி |
| ஜீவா | 4 முதல் 6 கோடி |
| கார்த்தி | 10 கோடி |
| பிரகாஷ் ராஜ் | 3 முதல் 5 கோடி |
| சந்தானம் | 5 கோடி |
| சத்யராஜ் | 2 கோடி (பாகுபலி2) |
| சிம்பு | 7 முதல் 8 கோடி |

| | |
|---|---|
| நயன்தாரா | 10 கோடி |
| சமந்தா | 8 கோடி |
| அனுஷ்கா | 5 கோடி |
| திரிஷா | 4 கோடி |
| பூஜா ஹெக்டே | 4 கோடி |
| தமன்னா | 4 கோடி |
| காஜல் அகர்வால் | 4 கோடி |
| ராஷ்மிகா மந்தனா | 4 கோடி |
| கீர்த்தி சுரேஷ் | 3 கோடி |
| ரகுல்பிரீத் சிங் | 3 கோடி |
| சாய் பல்லவி | 2 கோடி |
| ஆண்ட்ரியா ஜெரோமியா | 2 கோடி |
| நித்யா மேனன் | 2 கோடி |
| ஐஸ்வர்யா ராஜேஷ் | 2 கோடி |
| பிரியங்கா மோகன் | 1 கோடி |

## இரும்பு சத்து தரும்
# பீட்ரூட் புலால்

**தேவை:** சாதம், பீட்ரூட் துருவல் – தலா ஒரு கப், பொடியாக நறுக்கிய வெங்காயம், தக்காளி – தலா 1 இஞ்சி, பூண்டு விழுது – ஒரு டீஸ்பூன், பச்சை மிளகாய் – 3, புதினா, கொத்தமல்லி – சிறிதளவு, உப்பு, எண்ணெய் – தேவையான அளவு. பச்சை – சிறிய துண்டு. கிராம்பு, பிரியாணி இலை தலா – 1 சோம்பு கால் டீஸ்பூன், நெய் – 2 டீஸ்பூன்.

**செய்முறை:** சாதத்தை உதிரியாக வடித்துக் கொள்ளவும். பீட்ரூட்டைத் துருவிக் கொள்ளவும். கடாயில் எண்ணெய் அல்லது நெய்விட்டுக் காய்ந்ததும் பட்டைக் கிராம்பு, சோம்பு, பிரியாணி இலை சேர்த்து வதக்கி, நறுக்கிய வெங்காயம், தக்காளி சேர்த்து வதக்கி, சிறிய பச்சை மிளகாய் துருவிய பீட்ரூட், உப்பு சேர்த்துக் கிளறவும், புதினா, கொத்தமல்லி சேர்க்கவும். நன்றாக சேர்த்து வந்ததும், சாதத்தை ஒரு டீஸ்பூன் நெய் சேர்த்துக் கிளறவும். இதற்கு கேரட் தயிர் பச்சடி ருசியாக இருக்கும்.

**பலன்:** தோலின் மற்றும் இரும்பு, தாது உப்புக்கள் உள்ளன. நெய் சேர்ப்பதால், ஓரளவு கொழுப்பும், மாவுச்சத்தும் கிடைக்கும். கர்ப்பிணிப் பெண்களுக்கு நல்லது.





## கொழுப்பைக் கரைக்கும்
# கொள்ளு சூப்

**தேவையானவை:** கொள்ளு – 4 டீஸ்பூன், மிளகுத் தூள், சீரகத் தூள் – தலா அரை டீஸ்பூன், பூண்டு பல் – 5, தக்காளி – 2 பெருங்காயத்தூள் – அரை டீஸ்பூன், உப்பு தேவையான அளவு, கொத்தமல்லி கறிவேப்பிலை – சிறிதளவு.

**செய்முறை:** வெறும் கடாயில் கொள்ளைப் போட்டு, சிவக்க வறுக்க வேண்டும். ஆறியது மிக்ஸியில் போட்டு, அதனுடன் பூண்டு, தக்காளி சேர்த்து, நன்றாக அரைக்க வேண்டும். இதில் தேவையான தண்ணீர் சேர்த்து, நன்றாக கொதிக்க விட வேண்டும். நன்கு வெந்ததும் உப்பு மிளகுத் தூள், சீரகத்தூள், கொத்தமல்லி, கறிவேப்பிலை சேர்த்து இறக்க வேண்டும்.

**பயன்கள்:** கொழுப்பைக் கரைக் கும். ரத்தத்தைச் சுத்திகரிக்கும். உடலல் தேவையற்ற நீர், நச்சுக் களை எடுத்துவிடும். புரதம் நிறைந்து இருப்பதால் உடல் வளர்ச்சிக்கு உதவும்.




# கீதா சமையல்

geetha samayal YouTube channel

ஆயிரம் சமையல் வீடியோக்கள் உள்ளன

# ஆசிரியர் VS மாணவன்

வகுப்பில் பாடம் நடத்திக் கொண்டிருந்தேன் ஒரு மாணவன் மட்டும் கீழே குனிந்து கையில் ஏதோ எடுப்பதும் செய்வதுமாக இருந்தால்சட்டென பாடத்தை நிறுத்தி என்ன செய்து கொண்டிருக்கிறாய் என்று கேட்டேன்

அவன் தலை குனிந்தபடியே அங்கே அடுத்தடுத்து சென்று கொண்டிருக்கக் கூடிய கட்டெறும்புகளை இரண்டாக துண்டாடுகிறேன் ஐயா என்றான் இது தவறில்லையா என்று கேட்டேன் இல்லை ஐயா அது என்னை கடிக்கிறதே என்றான்.

சரி ஒரு கதையைச் சொல்கிறேன் கவனி என்று ஆரம்பித்தேன் மாண்டவியர் என்று ஒரு ரிஷி இருந்தார் தவத்தையே தன் இரு கண்களாகக் கொண்டு விளங்கிய அவர் சில காலமாக மௌன விரதத்தில் இருந்தார் அந்த சமயம் பார்த்து அரசவையில் திருடிய பொருட்களை மூட்டையாக கட்டி எடுத்துக்கொண்டு அந்த வழியாக திருடர்கள் ஓடி வந்தார்கள்

இவர் ஆஸ்ரமத்தில் உட்கார்ந்து கொண்டு மௌன விரதத்தில் இருந்தார் தப்பிப்பதற்கு வழி தெரியாமல் ஆசிரமத்திற்குள் நுழைந்த திருடர்கள் இவருக்கு பக்கத்தில் மூட்டைகளை எல்லாம் வைத்துவிட்டு ஒளிந்து கொண்டார்கள் அதற்கடுத்து அரண்மனை காவலர்கள் துரத்திக் கொண்டு வந்தார்கள்

மௌன விரதத்தில் இருந்த மாண்டவியரை பார்த்து இந்தப் பக்கம் திருடர்கள் யாரேனும் வந்தார்களா?நீங்கள் சொன்னால் நாங்கள் கண்டுபிடிப்பதற்கு சற்று வசதியாக இருக்கும் என்று கேட்டார்கள் இவரோ மௌன விரதத்தில் இருக்கிறார் அதனால் பேசவில்லை அதனால் அவர்களாகவே ஆசிரமத்தில் நுழைந்து தேடலானார்கள்.

அங்கே அரண்மனையில் களவாடப்பட்ட பொருள்கள் இருந்தன ஒருவேளை திருடர்களுக்கும் இவருக்கும் தொடர்பு இருக்கிறது என்று முடிவு செய்து இவரை கைது செய்து அரசவைக்கு அழைத்துச் சென்றார்கள்.

அரசரோ சற்றும் யோசிக்காமல் இவரை கழுவில் ஏற்றுங்கள் என்று உத்தரவிட்டார் அப்பொழுதும்முனிவர் மௌன விரதத்திலேயே இருந்தார் அப்படியே கழுவில் ஏற்றினார்கள்.

கழுவில் ஏற்றிய பிறகு இவர் அதில் இறக்கவும் இல்லை துன்புறவும்



thiraimalar.com திரைமலர்

இல்லை எப்பொழுதும் போல் இருந்தார் இந்த தகவல் மன்னருக்கு எட்டியது நாம் தவறிழைத்து விட்டோம் என்று நினைக்கிறேன் என்றுமன்னர் முடிவு செய்து கழுவிலிருந்து அவரை உருவி எடுக்க முயன்றார் முடியவில்லை

கழுவின் பாகங்களை வெட்டி எடுத்து ஒரு சிறு பகுதியை மட்டும் அவர் உடலிலேயே இருக்கும் படி விட்டுவிட்டார். அதையும் கையில் தூக்கிப் பிடித்துக் கொண்டு அவர் நடக்கலானார். அப்பொழுதுதான் அவர் யோசித்தார் இதற்கு என்ன காரணமாக இருக்கும் என தெரிய வேண்டும், தர்ம தேவதையை சந்தித்தார்.

அவர் முழுவதும் விசாரித்த பிறகு நீங்கள் சிறுவயதில் நடந்து கொண்ட ஒரு செய்கை தான் இவ்வளவு பிரச்சனைக்கும் காரணம் வெட்டுக் கிளிகளையும் சில பூச்சிகளையும் கையில் பிடித்து அதை துண்டு துண்டாக பிய்த்துப் போட்டீர்கள் அந்த பாவம் தான் இப்பொழுது பற்றி தொடர்கிறது என்று சொன்னார்.

உடனே முனிவர்

நான் அப்படி செய்யும் பொழுது என் வயது என்ன என்று கேட்டார்.

அப்பொழுது உங்களுடைய வயது பதினோரு என்றது தர்மதேவதை

உடனே மாண்டவ்யர் சொன்னார் 12 வயது வரை பாவங்கள் செய்தாலும் அது அறியாமல் செய்த கணக்கில் தான் வரும் பாவம் கிடையாது என்பது உனக்குத் தெரியாதா என்று சொல்லி தர்மதேவதையை நீ பூமியில் மானுட ஜென்மம் எடுத்து பிறகு மேல் உல கத்திற்கு வர வேண்டும் என்று சபித்தார் அப்படி பிறந்தவர் தான் விதுரர். அந்த 12 வயது வரைஎந்த தவறு செய்தாலும் பாவம் இல்லை என்பது ஒரு பக்கம் இருந்தாலும் மாண்டவியர் 14 வயது வரை தவறு செய்தாலும் பாவம் இல்லை என்கின்ற புது சட்டத் தையும் அப்பொழுதே இயற்றினார்

ஆனால் இன்றைய கால சூழலில் மாணவர் களின் அறிவு முதிர்ச்சி அவர்களுடைய செயல்பாடு கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பார்த்தால் எட்டு வயதை தாண்டி மாணவர்கள் தவறு செய்தால் அதற்குத் தகுந்த தண்டனைகள் தர வேண்டும் அப்பொழுதுதான் நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க முடியும்அதை தாண்டி அவர்கள் செய்யும் தவறுகளுக்கு தவறுக்கு

ஏற்றார் போன்று தண்டனைகளை நாம் தந்தால் மாத்திரம் நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும் என்பதை மாணவர்களுக்கு சொன்னேன்

ஆக அந்த எறும்பை துண்டாடிய மாணவனிடம் நீ பாவத்தை கட்டிக் கொள்ளாதே இப்படி செய்யாதே என்றேன் அவன் சொன்னான் ஐயா எனக்கு 12 வயது தான் ஆகிறது. நீங்கள் சொன்ன கதையின் படி இன்னும் இரண்டு ஆண்டுகள் நான் தவறு செய்யலாம் தானே என்றான் இப்படி எல்லாம் பேசும் மாணவர்களை வைத்து நாம் என்னதான் செய்வது?



செப்டம்பர் 1 முதல் புத்தம் புதிய பொலிவுடன்
வாரந்தோறும் பண்முகச் செய்தியுடன் உங்கள்
thiraimalar.com திரைமலர்
உங்கள் விருப்பமான துறையில்,
சாதிக்க விரும்புபவர்கள், உங்களைப் பற்றிய
தகவலை எங்களுக்கு தெரிவியுங்கள்....
வாய்ப்புக்கு வழிகாட்டுகிறோம் 9444264610
www.thiraimalar.com இணையதளத்திலும்,
thiraimalar E-Magazine இல் வெளியிட்டு



# திராட்சையின் மருத்துவ பயன்

எல்லா வகையான திராட்சையிலும் பொதுவாக வைட்டமின் ஏ உயிர்சத்து அதிக அளவில் காணப்படும். பொதுவாக சரியாக பசி எடுக்காமல் வயிறு மந்த நிலையில் காணப்படுபவர்கள் கறுப்பு திராட்சை எனப்படும் பன்னீர் திராட்சையில் அரை டம்ளர் சாறு எடுத்து அதனுடன் சர்க்கரை சிறிது சேர்த்து அருந்திவந்தால் மந்தநிலை நீங்கி நன்றாகப் பசி எடுக்கும்.

பெண்களுக்கு ஏற்படும் சூதக கோளாறு களுக்கு திராட்சை சாறு ஒரு சிறந்த வரப்பிரசாத மாகும்.

மாத விலக்கு தள்ளிப்போதல், குறைவாக வும், அதிகமாகயும் போதல் போன்ற குறைபாடு களுக்கு கறுப்பு திராட்சை சாறு அரை டம்ளரில் சிறிது சர்க்கரை சேர்த்து தினமும் வெறும் வயிற்றில் சாப்பிட்டுவந்தால் முறையான கால இடைவெளியில் மாதவிலக்கு வெளியாகும். திராட்சை சாற்றை தொடர்ந்து 21 நாட்கள் சாப்பிட்டு வரவேண்டும்.

வயிற்றில் இரைப்பை, குடல்களில் புண் ஏற்பட்டிருந்தால், வாயிலும் புண் ஏற்படும். வாயில் உள்ள புண்ணை ஆற்ற வேண்டுமானால் முதலில் வயிற்றில் உள்ள புண்ணை ஆற்ற வேண்டும். இருமல் நின்றுவிடும். அல்லது எலுமிச்சை சாறுடன் சிறிய இஞ்சி துண்டை நறுக்கிப் போட்டு கொதிக்க வைத்து இறுத்து ஆற வைத்து இதே போல் தொடர்ந்து காலை மாலையாக மூன்று தினங்கள் கொடுத்து வந்தாலும் இருமல் நின்று விடும். தலைவலி இருப்பவர்கள் சூடான காபி யில் அரை எலுமிச்சை பழத்தினைப் பிழிந்து 3 நாட்கள் குடித்துவந்தால் பிறகு தலைவலியேவராது.

தேள் கொட்டிய இடத்தில் எலுமிச்சை பழத்தினை இரண்டாகப் பிளந்து ஒரு பாதியை தேள் கொட்டிய இடத்தில் நன்றாகத் தேய்க்க வேண்டும். இவ்வாறு இரண்டு துண்டுகளையும் தேய்த்துவிட்டால் சிறிது நேரத்திற்கெல்லாம் விஷம் இறங்கி வலி நின்றுவிடும்.

எலுமிச்சம் பழத்தினை அடிக்கடி உபயோ கித்து வருபவர்களுக்கு உஷ்ண அதிகரிப்பால் உண்டாகும் வயிற்று வலி, பித்தத்தால் ஜீரண உறுப்புகளில் ஏற்படும் குறைபாடுகள், உஷ்ணத்தால் ஏற்படும் சிறுநீர் தொந்தரவுகள், மலச்சிக்கல், உஷ்ண இருமல் ஆகிய தொந்தர வுகள் வராது.



thiraimalar.com திரைமலர்

சென்னையை துரத்தும் மைதா மரணம்...

# மக்களே உஷார்!



சென்னையில் கடந்த சில மாதமாக இறந்தவர்களின் வயது 33/ 31/ 34/ 35/ 37/ 39/ 41/ 43/ 46 இதில் அதிக பேர் மாரடைப்பால் மரணம் அடைந்து விட்டனர்...

## என்ன காரணம்?

முட்டையும் பரோட்டாவும்தான் மேற்கண்ட இறப்பை அதிகப்படுத்தியதாக கூறப்படுகிறது.

இதனால் புரோட்டாவும் முட்டையும் அதிக அளவில் தினமும் உட்கொள்ள வேண்டாம்... என்ற விழிப்புணர்வு தற்போது மருத்துவ ரீதியாக விழிப்புணர்வாக கூறப்படுகிறது.

கடலை எண்ணெய் (or) பாமாயிலில் ஊற வைத்து சாப்பிடும் எண்ணெய் புரோட்டாவால் மாரடைப்பு பாதிப்பு அதிகம்!

புரோட்டா என்ற இந்த இனிய சிற்றுண்டியை



நினைத்தாலே நாக்கில் எச்சில் ஊறும். பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை எல்லாரும் விரும்பும் ஒரு எளிமையான உணவு, புரோட்டா தமிழகம் முழுவதும் பரவலாக காணப்படுகிறது.

குறிப்பாக சென்னையில் இந்த புரோட்டாவின் புழக்கம் மிகுதி. திரும்பி திசையெல்லாம் புரோட்டா கடைகள் மலிந்திருக்கின்றது.

குறிப்பாக ஐ.டி., நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் உள்ள இடங்களில் விடிய விடிய கூட புரோட்டா கடைகள் இயங்குவதுண்டு. இரவில் கண்விழித்து பணிபுரியும் பலரின் பசியை போக்கும் அன்றாட உணவாகவே பரோட்டா மாறியுள்ளது.

இதிலும் பல பெயர்களில் புரோட்டா பரிணாமவளர்ச்சி அடைந்து விட்டது. புரோட்டாக் கடைகளிலும் எத்தனை வகைகள்?

விருதுநகர் புரோட்டா, தூத்துக்குடி புரோட்டா, கொத்து புரோட்டா சில்லி புரோட்டா, பன் புரோட்டா, சில்லி புரோட்டா, முட்டை புரோட்டா, பிச்சிப்போட்ட புரோட்டா, இலை புரோட்டா.... இன்னும் ஒவ்வொரு கடைக்கு ஒவ்வொரு விதத்தில் புரோட்டா தயாரிக்கப்படுகிறது.

இப்படியாக இளைஞர்களை கவரும் புரோட்டாவின் விற்பனை நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது. ஆனால் இந்த புரோட்டா வினால் உடலுக்கு தீங்கு வரும் என்று உணவியல் வல்லுனர்கள் தெரிவிக்கிறார்கள்.

கேரளாவில் மைதாவில் உள்ள தீங்குகளைப் பற்றி விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தி வருகிறார்கள், ஐரோப்பிய நாடுகள், இங்கிலாந்து, சீனா போன்ற நாடுகள் மைதாவில் செய்யப்படும் ஒருசில பொருட்களுக்கு தடைவிதித்துள்ளன.

புரோட்டா மட்டுமல்லாமல் இன்னும் பல

வகை உணவுகள் இந்தக் கொடிய மைதாவால் செய்யப்படுகிறது. இரண்டாம் உலகப் போரின் போது ஏற்பட்ட கோதுமை பற்றாக்குறையால் மைதாமாவினால் செய்யப்பட்ட உணவு புழங்கத் தொடங்கின. புரோட்டாவும் பிரபலமடைந்தது.

மைதாவில் நார்ச்சத்து எதுவும் கிடை யாது அதனால் நமக்கு செரிமான சக்திகுறைந்து விடுகிறது குறிப்பாக இரவில் புரோட்டா சாப்பிடு வதை அடியோடு நிறுத்த வேண்டும்.

அதுமட்டுமல்ல, மைதாமாவினால் தயாரிக் கப்படும் ரொட்டிப் பொருள்கள், கேக் வகைகள் போன்றவைகளை நாம் சாப்பிடுவதை நிறுத்த வேண்டும். நன்றாக அரைக்கப்பட்ட கோதுமை மாவு, லேசான மஞ்சள் நிறத்தில் இருக்கும், அதை அப்படியே சப்பாத்தி செய்து சாப்பிடுவது உடலுக்கு நன்மை பயக்கும்.

ஆனால் கோதுமையிலிருந்து உயிர் சத்துக் கள் எடுக்கப்பட்டு, கழிவிலிருந்தே மைதா தயா ரிக்கப்படுகிறது.

இதில், பெண்சாயில் பெராக்ஸைடு என்னும் ரசாயனம் சேர்க்கப்படுகிறது. இந்த ரசாயனம் தான் நாம் தலையில் நரைத்த முடியில் அடிக்கும் டையில் உள்ள ரசாயனம் இந்த நச்சு ரசாயனம் மாவில் உள்ள புரோட்டீன் சத்துடன் சேர்ந்து கணையத்தை சேதமாக்கி நீரழிவு நோய் வருவ தற்கு காரணமாகிறது.

அது மட்டுமல்ல, அலோக்கான் என்னும் ரசாயனம் மாவை மிருதுவாக்கவும், ஆர்ட்டிஃபி சியல் கலர், மினரல் ஆயில், டேஸ்ட் மேக்கர், சாக்கரின் சர்க்கரை அஜினா மோட்டோ போன்



றவை சேர்க்கப்படுவதால் புரோட்டா இன்னும் அபாயகரமாகிறது.

மைதா சாப்பிடுவது இந்தியாவில் தான் அதிகம். உலகளவில் சர்க்கரை நோயாளிகளும் நம் நாட்டில்தான் அதிகம். மேலும் சிறு நீரகம், இதயம் சம்மந்தப்பட்ட நோய்களும் இதனால் வருவதாக கூறுகிறார்கள். கேரளாவில் இந்த விசயத்தைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தி வரும் தொண்டு நிறுவனங்களில் முக்கிய பங்கு வகிப்பது கிருஷ்ணகுமார் என்பவர் தலைமையில் இயங்கும் மைதா வர்ஜனா சமிதி ஆகும்.

பாலக்காடு மாவட்டம் முழுவதும் மைதாவின் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. பல மாவட்டங்களிலும் அங்கு பிரச்சாரம் தொடர்கிறது. இனிமேலாவது நம் பாரம்பரிய உணவான கேழ்வரகு, கம்பு, சோளம் உட்கொண்டு அந்நிய உணவான மைதா என்கிற ரசாயனம் கலந்த புரோட்டாவை புறம் தள்ளுவோம்.

நாமும் விழித்துக் கொள்வோம் நம் தலைமுறையையும் காப்போம்!

## விஷமே உணவானது...?

மைதா மாவு சுவையாகவும், நீண்ட நாட்களுக்கு கெடாமலும் இருப்பதற்காக செயற்கை நிறமூட்டிகள், இரசாயன பொருட்கள் போன்ற பலவற்றை சேர்த்து தயாரிக்கப்படுகிறது. எனவே இந்த மைதா மாவில் உடலுக்கு தேவையான எந்த விதமான சத்துக்களும் இல்லை. இவை முற்றிலும் உடலுக்கு தீங்கு விளைவிக்கும் பொருளாகும்.

1930 ஆம் ஆண்டு அமெரிக்காவில் பசை மாவாக மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இந்தியாவிலும் சுவரொட்டிகள் ஒட்டுவதற்காக மைதாவை பயன்படுத்தி இருந்தார் கள். ஆனால் இப்பொழுது மைதாமாவு உணவாக பயன்படுகிறது. அதுமட்டு மில்லாமல் சில நாடுகளில்மைதா மாவை தடை செய்தும் இருக்கிறார்களாம்.




இவ்வளவு கெடுதல் இருந்தும் இந்த மைதா மாவை ஏதோ ஒரு உணவு மூலமாக அனைவரும் சாப்பிட்டு கொண்டு தான் இருக்கிறோம்.

எனவே மைதா மாவு கலந்த உணவுகளை தவிர்த்து கொள்வது தான் ஆரோக்கியத்திற்கு நல்லது.

# இதுவரை வெளிவந்த இதழ்களை




thiraimalar.com
திரைமலர்
www.thiraimalar.com

MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY

## இணையதளங்களில் இலவசமாக படிக்கலாம்

வாரம்தோறும் வாட்சப்பில்
இதழ் பெற விரும்புபவர்கள்
hi என்று கீழ்காணும் எண்ணிற்கு
மெசேஜ் அனுப்பவும் வாட்சப் குருப் லிங்க்
அனுப்பிவைக்கப்படும்

**9444264610**

**Owned, Published by N.Geetharani. Design by SMLGraphics, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : N.Geetharani, Cell: 9444264610.**
Website: www.thiraimalar.com / E-mail: thiraimalar@yahoo.com